செய்தி வெளியீடு எண்: 693 நாள்: 27.09.2018

## செய்தி வெளியீடு

### முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 127–வது பிறந்த நாளில் அவரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளனர்.

---

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் பிறந்த நாளான 29.09.2018 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் அவரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளனர்.

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்கள் சென்னை மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றியவர். பின்னர் சட்டமன்ற உறுப்பினராகவும், 1945–1946 ஆண்டுகளில் சென்னை மாநகரத்தின் மேயராகவும் பணியாற்றினார். ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்த முதல் மேயர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

நமது நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் மறைவுக்குப்பின் இந்திய குடியரசுக் கட்சியின் தலைவராகவும் விளங்கினார். கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு அரும்பாடுபட்டவர். மாநகராட்சிப் பள்ளிகளில் அனைத்துத் தரப்பினரும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களும் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புகிறார்களா என்பதை கண்காணிப்பதற்கு நான்கு தனி அலுவலர்களை நியமித்து, மக்களின் கல்விக்கண்களைத் திறந்து வைத்தவர்.

அன்னாரின் நினைவைப் போற்றும் வகையில் அவரது 127–வது பிறந்த நாளான 29.09.2018 அன்று சென்னை தங்கசாலை மணிக்கூண்டு அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**